அரையாண்டுத் தேர்வு வினாத்தாள் - டிசம்பர் - 2024

12ஆம் வகுப்பு

# பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி
மதிப்பெண்: 90

அறிவுரைகள் :

1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி-1

14x1=14

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ. யாப்பருங்கலக்காரிகை ஆ. தண்டியலங்காரம்
இ. தொல்காப்பியம் ஈ. நன்னூல்

2) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்

3) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4) 'உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்'' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

5) தமிழில் திணைப் பாகுபாடு ............ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

6) 'குழிமாற்று'' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

7) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககால சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை.....
அ) அறவோர். துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

8) யானை புக்க புலம் போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்.
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்.

9) பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

10) காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை'' இத்தொடரில் - கலன் உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக் கருவி
இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

11) அல்லல் படுப்பதூம் இல் - எவரோடு பழகினால்?
அ) வாள் போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

12) 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்'' இக்கவிதையில் ...................... பயின்று வந்துள்ளது.
அ) பயன்படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

13) மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது.
அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

14) பொருத்துக

அ) ஆமந்திரிகை - 1. பட்டத்து யானை
ஆ) அரசு உவா - 2. மூங்கில்
இ) கழஞ்சு - 3. இடக்கை வாத்தியம்
ஈ) கழை - 4. எடை அளவு

அ) 3,1,4,2 ஆ) 4,2,1,3 இ)1,2,3,4 ஈ) 4,3,2,1

## பகுதி - II

### பிரிவு – 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' விளக்கம் தருக.

16) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்.

17) 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' யார்க்கு?

18) முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20) 'பருவத்தே பயிர் செய்' நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

21) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் நூல் குறித்து எழுதுக.

### பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடைதருக. 7x2=14

22) மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) அலை, அளை, அழை ஆ) கலை, களை

23) கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அ) Platform ஆ) Affidavit

24) பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்
ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

25) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அமர்ந்தான் ஆ) பகைத்த

26) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) இனநிரை ஆ) பெருங்கடல்

27) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) வெங்காயம் ஆ) தலைமை

28) உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும் தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

29) தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்

30) வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

## பகுதி –III

### பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக. 2x4=8

31) எங்கிருந்தோ வருகிறது

வண்ணத்துப்பூச்சியொன்று

பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32) நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

33) கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

34) குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

### பிரிவு -2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடைதருக. 2x4=8

35) சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்? விளக்குக.

36) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

38) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

### பிரிவு-3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடைதருக. 3x4=12

39) உவமை அணி (அல்லது) நிரல்நிறைஅணியைச் சான்று தந்து விளக்குக.

40) பாநயம் பாராட்டல் (திரண்ட கருத்து, மையக்கருத்து, ஏற்புடைய நயங்கள் மூன்று அமைக்க).

*வெட்டி யடிக்குது மின்னல் – கடல்*
*வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;*
*கொட்டி யிடிக்குது மேகம் – கூ*
*கூவென்று விண்ணைக் குடையுது காற்று*
*சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று*
*தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்*
*எட்டுத்திசையும் இடிய – மழை*
*எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!*

*– பாரதியார்*

41) அ) **பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**(அல்லது)**

ஆ) **செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

42) 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' (அல்லது)
'யானைக்கும் அடிசறுக்கும்' – என்னும் பழமொழியினை நும் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

43) அ) தமிழாக்கம் தருக:

அ) A new language is a new life

ஆ) Knowledge of language is the doorway to wisdom

இ) The limits of my language are the limits of my world

ஈ) Learning is a treasure that will follow its owner everywhere

43. ஆ) காது கேளாதோர்க்கான மாற்று வினா

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்கள அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியாக் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிப் பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர் மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே மொழியால் வளர்பவரும் மக்களே.

வினாக்கள் :

1. மொழி என்பது யாது ?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது ?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது ?
4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44) அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. அல்லது

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45) அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

அல்லது

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46) அ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

அல்லது

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - தலைக்குளம் கதையின்றி உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

அ) "வையகம் பனிப்ப...." எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'அரிது' என முடியும் குறளை எழுதுக.